இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 37 | பிப்ரவரி | 2024 | Vol.: 9 | Issue: 37 | February | 2024

# வெள்ளியங்காட்டான் படைப்புகளில் திராவிடக் கருத்தியல் Dravidian Ideology in Veliangatan Works

**முனைவர் இரா. இராஜா**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தேசியக்கல்லூரி (தன்னாட்சி),
திருச்சிராப்பள்ளி - 1. Email ID: rajar@nct.ac.in
DOI: 10.5281/zenodo.10714140

**ஆய்வுச்சுருக்கம்**

வெள்ளியங்காட்டான் (1904 – 1991) கொங்கு வட்டாரத்தில் வாழ்ந்த கவிஞர். இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் (1942) எழுதத் தொடங்கிய அவர், தமிழுக்குப் பல படைப்புகளைக் கொடுத்துள்ளார். அவற்றின் உள்ளடக்கம் சார்ந்த ஆய்வுகள் மிகுதியாக வெளிவரவில்லை. குறிப்பாக, அவர் படைப்புகளில் காணப்படும் செய்திகளைக் கருத்தியல் அடிப்படையில் பகுத்து ஆராயும் முயற்சி மேற்கொள்ளப் பெறவில்லை. இந்திய/ தமிழக அரசியல் பொருளாதாரம் மற்றும் கலை இலக்கியத் துறைகளில் இருபதாம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் செல்வாக்குப் பெற்ற கருத்தியல்களான இந்திய தேசியம், பொதுவுடைமைத் தத்துவம், திராவிட இயக்கம் போன்றவற்றுள் வெள்ளியங்காட்டானிடம் எது மிகுதியான செல்வாக்கைச் செலுத்தியுள்ளது என்பதை இக்கட்டுரை ஆராய முற்படுகிறது. கவிஞன் (1967), அறிஞன் (1977), தமிழன் (1979) ஆகிய மூன்று படைப்புகளைக் களமாகக் கொண்டு இம்முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. தென்னிந்தியாவின் பூர்வ குடிகள் திராவிடர்கள் என்பதையும், அவர்களின் அரசியல், பண்பாடு, மொழி, கலை இலக்கியங்களின் மீது ஆரியர்கள் நெடுங்காலமாக ஆதிக்கம் செலுத்தி வருகிறார்கள் என்பதையும் அடைப்படையாகக் கொண்டு திராவிடக் கருத்தியல் கட்டமைக்கப்பட்டுள்ளது. அதன் தாக்கம், வெள்ளியங்காட்டான் படைப்புகளில் எந்தெந்த வகைகளில் வெளிப்படுகிறது என்பதை இக்கட்டுரை இனங்காட்டுகிறது. இதன்மூலம் இதுவரை திராவிட இயக்கக் கவிஞர்களாக இனங்காணப்பட்டோர் வரிசையில் வெள்ளியங்காட்டனும் சேர்கிறார். மேலும், அத்தகையோர் படைப்புகளில் வெளிப்படும் திராவிட இயக்கக் கருத்துகளுடன், வெள்ளியங்காட்டானையும் விரிவாக ஒப்பிட்டு ஆய்வு செய்யும் வாய்ப்பினை இக்கட்டுரை ஏற்படுத்தித் தருகிறது.

**Abstract**

Velliyankattaan (1904 – 1991) was a poet who lived in the Kongu region. He started writing in the mid-twentieth century (1942) and has given many works to Tamil. There have not been many studies on the content of his works. In particular, there has been no attempt to analyze the messages found in his works based on ideology. This article attempts to examine which of the ideologies that gained influence in the mid-twentieth century in the fields of Indian/Tamil Nadu politics, economics, and art and literature, such as Indian nationalism, communism, and the Dravidian movement, had the greatest influence on Velliyankattaan. This effort is undertaken with three works, namely "Kavignar" (1967), "Arignan" (1977), and "Tamilan" (1979). The Dravidian ideology is built on the basis that the original inhabitants of South India are Dravidians and that the Aryans have been dominating their politics, culture, language, art, and literature for a long time. This article identifies the ways in which its impact is reflected in Velliyankattaan's works. Through this, Velliyankattaan also joins the ranks of those who have been identified as Dravidian movement poets so far. Additionally, this article provides

the opportunity to examine Velliyankattaan in detail in comparison with the Dravidian movement ideas that appear in the works of such people.

**Keyword:** வெள்ளியங்காட்டான், திராவிடக் கருத்தியல், ஆரியம் X திராவிடம், திராவிட இலக்கியம்

கலை இலக்கியப் போக்குகளைத் தீர்மானிப்பதில் சமூகச் சூழலுக்குப் பெரும்பங்குண்டு. இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழ் நிலப்பரப்பில் இந்திய தேசிய காங்கிரஸ், பொதுவுடைமை இயக்கம், நீதிக்கட்சி போன்ற இயக்கங்கள் செல்வாக்குப் பெற்றிருந்தன. இந்திய விடுதலைக்குப் பிந்தைய பதின் ஆண்டுகளில் பகுத்தறிவுவாதமும் திராவிடக் கட்சி அரசியலும் இந்தித் திணிப்பு எதிர்ப்புப் போராட்டங்களும் தமிழ்ப் பண்பாட்டில் பெரும் தாக்கத்தைச் செலுத்தின. அவை கால் நூற்றாண்டு காலம் கருக் கொண்டு வளர்ந்து வந்தாலும் 1960-களின் பிற்பகுதியில் வீச்சாக வெளிப்பட்டன. இப்போக்கு அன்றைய கலை இலக்கியவாதிகளை நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதித்தது. அதனை ஏற்றும் எதிர்த்தும் செயல்பட வேண்டிய சூழல் தமிழ்ப் படைப்பாளிகளுக்கு இருந்தது. சுருங்கக் கூறினால், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் திராவிடக் கருத்தியலைத் தவிர்த்துவிட்டுத் தமிழின் கலை இலக்கியச் செயல்பாடுகளைப் பற்றிப் பேச முடியாது.

வெள்ளியங்காட்டான் (1904 – 1991) கொங்கு வட்டாரத்தைச் சார்ந்த கவிஞர். தம் ஊர்ப்பெயரைப் புனைபெயராக வைத்துக்கொண்டார். அவரின் இயற்பெயர் இராமசாமி என்பதாகும். எளிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த அவருக்கு முறையான பள்ளிக்கல்வி கிடைக்கவில்லை. ஆனாலும், தன்முயற்சியால் கற்றுத் தேர்ந்து கவிஞராக வெற்றிக்கொடி நாட்டியுள்ளார். 1942 - இல் எழுதத் தொடங்கிய அவர் பிரசண்ட விகடன், தமிழன், தியாகி, சேரநாடு, ஹிந்துஸ்தான், சுதர்மம், தமிழுலகம், வினோதன், மதுரமித்ரன் முதலிய இதழ்களில் தம் படைப்புகளை வெளியிட்டுள்ளார். பல்வேறு குறுங்காவியங்களையும் கட்டுரைகளையும் அவர் எழுதியுள்ளார். அவை தொகுத்து வெளியிடப் பெற்றுள்ளன. அவரின் படைப்புகள் அனைத்தும் 2010இல் தமிழக அரசால் நாட்டுடைமை ஆக்கப்பட்டுள்ளன. அவற்றுள் கவிஞன் (1967), அறிஞன் (1977), தமிழன் (1979) ஆகிய படைப்புகளில் காணப்படும் திராவிட இயக்கச் சீர்திருத்தக் கருத்துகள் இக்கட்டுரையில் பகுத்தாராயப்படுகின்றன.

## 0. திராவிடக் கருத்தியல்

இந்திய/தமிழ்ச் சமூகத்தில் ஆயிரம் ஆண்டுகளாகச் சாதியப் படிநிலைகள் நிலவி வருகின்றன. வரலாற்றுப் போக்கில் அவற்றை எதிர்த்து அவ்வப்போது சில மாற்று மதங்களும் மரபுகளும் வினையாற்றியுள்ளன. அதன் தொடர்ச்சியாகக் குடியேற்ற காலத்தில் ஆரிய சமஸ்கிருத மொழியின் சார்பற்றுத் தனித்து இயங்கும் வல்லமை தென்னிந்திய மொழிகளுக்கு உண்டு என்னும் உண்மை, அறிவியல் அடிப்படையில் நிறுவப்பட்டது. வரலாற்றுச் சான்றாதாரங்களைக் கொண்டு 'திராவிட மொழிக் குடும்பம்' என்னும் பெயரும் அவற்றுக்கு இடப்பட்டது. இவ் ஆராய்ச்சியை பிரான்சிஸ் வைட் எல்லிஸ் (1777–1819), இராபர்ட்டு கால்டுவெல் (1814–1891) போன்றோர் திறம்படச் செய்தனர். மொழி ஆய்வுலகில் அது குறிப்பிடத்தக்கதாகும். திராவிடக் கருத்தியலின் பாய்ச்சல் மொழித் தளத்திலிருந்து அரசியல் பொருளாதாரத் தளத்திற்கும் பண்பாட்டுத் தளத்திற்கும் மாறியது.

பல காலமாக நிலவி வந்த 'வைதீகம் × அவைதீகம்' என்னும் எதிரிணையுடன் 'ஆரியம் × திராவிடம்' என்பதும் வலுவான துணையாகச் சேர்ந்தது. 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஊன்றப்பட்ட அவ்விதை, 20 –ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழக அரசியலில் பெருமரமாகத் தழைத்து நின்றது. இந்திய/தமிழ்ச் சமூகத்தில் நிலவிவரும் ஏற்றத்தாழ்விற்கு அரசியல், பொருளாதாரம், பண்பாட்டுத் தளங்களில் ஆரியர்கள்,

திராவிடர்கள்மேல் ஆதிக்கம் செலுத்தி வருவதே காரணம் என்ற முழக்கம் ஓங்கி ஒலித்தது. அதனை அக்காலத்தில் தோன்றிய கலை இலக்கியங்களிலும் காண முடியும்.

**1. ஆரியம் × திராவிடம்[1] (தமிழ்)**

இந்தியாவின் பூர்வ குடிகள் திராவிடர்கள் என்பதும், ஆரியர்கள் வெளியிலிருந்து வந்து இங்குக் குடியேறியவர்கள் என்பதும், சிந்து சமவெளி போன்ற ஆய்வுகளால் உறுதி செய்யப்பட்டன. புதிதாக வந்த ஆரியர்கள், திராவிடர்களின் செல்வங்களையும் உரிமைகளையும் பறித்துக் கொண்டனர் என்னும் கருத்து முன்வைக்கப்பட்டது. அதனை வெள்ளியங்காட்டான் கவிதைகளிலும் காண முடிகிறது. அவர் எழுதிய 'கவிஞன்' என்னும் குறுங்காவியத்தில்,

*"ஆரியப் பொய்யாம் புல்பூண்டு அடர்த்தியாய் முளைத்த தாலே*
*சீரிய தமிழ்க் கோட்பாடாம் செழும்பயிர் வளர்ச்சி குன்றிக்*
*கோரிய பயன் பெறாமல் குன்றிய(து)" (1967:18)*

எனக் கூறுகின்றார். இதனால் வெளியில் இருந்து வந்தோர், சொந்த மண்ணின் மக்கள் வளர்ச்சிக்கு இடையூறாக இருப்பதைக் கவிஞர் உணர்த்துகின்றார்.

**2. பார்ப்பன எதிர்ப்பு**

ஆரிய இனமான பார்ப்பனர்கள், தமிழ்க்குடிகளின் வளர்ச்சிக்கு எதிரான சூழ்ச்சிகளைச் செய்தனர் என்பதும், அதனால் அவர்கள் பயன்பெற்றதுடன் பிறரைச் சுரண்டுவதற்கும் துணைபோயினர் என்பதும், உடல் உழைப்பில் ஈடுபடாமலேயே புரட்டுகளைச் செய்து பிழைத்தனர் என்பதும் திராவிடக் கருத்தியல் பார்வையாகும். இதனை,

*"பணம் மட்டும் பெற்றுக்கொண்டு பாவத்தைத் தீர்க்கும் நல்ல*
*குணம் மட்டும் கொண்ட தெய்வம் குளக்கரைத் தெய்வம் என்று*
*மணி மட்டும் அடித்துக் கொண்டே மனிதருக்கு எடுத்துக் கூறும்*
*பணிமட்டும் புரிவாய்ஆ யின் பணம்கொட்டிக் கிடக்கும் நந்தா" (1967:23)*

*"பசியொரு பக்கம் பார்ப்பான் பரிவின்றிப் பகர்ந்த சொல்லின்*
*இசியொரு பக்கம் என்ன இதயம் தொய்வு எய்தி" (1979:18)*

என்னும் வெள்ளியங்காட்டான் பாடலடிகளால் அறிய முடிகிறது.

**3. கோயில் சுரண்டலைக் கண்டித்தல்**

இறைவழிபாடு என்பது உலகம் தழுவிய ஒன்று. மக்கள் தங்கள் உளவியல் தேவைக்காகவும் பலவகை நம்பிக்கைகளுக்காகவும் வழிபாடுகள், சடங்குகள், விழாக்களை முன்னெடுக்கின்றனர். அவ் வழிபாட்டு இடங்கள் நிறுவனவயப்பட்டு அதிகார பீடங்களும் ஆகமங்களும் தலைமைப் பதவிகளும் உருவாகி விடுகின்றன. அவை மக்களுக்கு நல்வழி காட்டுவதற்குப் பதிலாகச் சுரண்டும் பணிகளில் ஈடுபட்டதைப் பல சமய வரலாறுகள் காட்டுகின்றன. இதில் கீழை, மேலைச் சமயங்களுக்கு இடையில் மிகுந்த ஒற்றுமைகள் உண்டு. பரந்துபட்ட நிலங்களையும், பொன் முதலான உலோக நகைகளையும், அளவற்ற செல்வங்களையும் புழங்கும் நிறுவனங்களாக வழிபாட்டு இடங்கள் மாறிப் போவதைக் காண முடிகிறது. அதனால், முறைகேடுகளும் சுரண்டல்களும் அதிகமாகின்றன. அவற்றை எதிர்ப்பது திராவிடக் கருத்தியலின் ஒரு கூறாகும். நாளடைவில் கோயில்களால் மக்களுக்கு நன்மைகளை விட, தீமைகளே மிகுதியாக விளையும் என்பதை,

*"எழுப்பிய கோவிலாலும் இயற்றிய பூசையாலும்*
*இழப்பன்றி இதுகாறும் இம்மியும் பயன்தான் இல்லை;*

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 37 | பிப்ரவரி | 2024 | Vol.: 9 | Issue: 37 | February | 2024

*பழிப்பின்றி இனிமேலேனும் பாரதம் செழிக்க வேண்டின்*
*உழைப்பன்றி உழைப்போர்அன்றி உதவிஒன்றிலை வேறுஎன்றான்"*
*(1967:74)*

என வெள்ளியங்காட்டான் குறிப்பிடுகின்றார். 'கவிஞன்' என்னும் குறுங்காவியத்தில் வரும் நாகப்பன் என்னும் மாந்தர், புதிய கோயில் கட்ட நன்கொடையைப் பிறரிடத்துக் கேட்டும், தன்செல்வத்தைத் தர முன்வரும்போதும், கவிஞன், நந்தன் ஆகிய மாந்தர்கள் தடுத்து, இருக்கும் கோயில்கள் போதாதென்று ஏன் இந்த வீண் வேலை? என்று கூறி, ஊரில் ஒரு பள்ளிக்கூடம் கட்ட ஏற்பாடு செய்வதாக வெள்ளியங்காட்டான் காட்டியுள்ளார்.

### 4. போலிச் சாமியார்களைத் தோலுரித்தல்

எல்லாக் கொள்கைகளிலும் அசல், போலி இருப்பதைப் போன்று ஆன்மிகத்திலும் பல பதர்கள் இருப்பது உலக இயற்கை. இப்படிப்பட்ட பொய்வேடங்களை ஆன்மிக, அறநூல்களே பலவாறு கண்டித்துள்ளன. அதனால், ஆரியத்திற்கு எதிரான திராவிடக் கருத்தியல், போலிச் சாமியார் வேடதாரிகளைக் கண்டிப்பதில் வியப்பில்லை. அத்தகு கருத்துகள் வெள்ளியங்காட்டான் படைப்புகளில் இடம்பெற்றுள்ளதை,

*"காமத்தைக் கருத்துள் கொண்டு கடவுளின் நிலை ஓராமல்*
*நாமத்தை நெற்றிக்கு இட்டு நாடொறும் உண்டு நன்றாய்*
*ஊமத்தை மலர்போல் நீண்டே உருவத்தில் பெரியோராகி*
*ஈமத்தை நிறைக்க வாழும் ஈனத்தை மறைப்பதற்கோ" (1967:11)*

என்னும் பாடலால் அறிய முடிகிறது.

### 5. வேதம், வினைப்பயன் எதிர்ப்பு

வேதமும் வினைப்பயனும் மக்களின் சுய சிந்தனைகளுக்கும் உழைப்பிற்கும் உரிமைக்கும் எதிரானவை என்பதும், அவை ஆள்வோரின் சுரண்டலுக்கே வழிவகுக்கின்றன என்பதும் திராவிடக் கருத்தியல் பார்வையாகும்.

வேதக்கருத்துகள் சமூகத்தின் மேல்சாதி மக்களின் நலன்களைப் பாதுகாப்பதற்காகவே உண்டாக்கப்பட்டுள்ளன. அவற்றில் எல்லோருக்குமான சமத்துவம் இல்லை. இந்தியச் சமூகத்தில் பார்ப்பனர் அல்லாதார் வேதங்களைப் படிப்பது பல நூற்றாண்டுகளாகத் தடைசெய்யப்பட்டு இருந்ததே அதற்கான சான்றாகும்.

*"இல்லாத கோவில் தெய்வம் இருப்பதாய் இயற்றி இங்கே*
*பொல்லாத புரோகிதப் பொய் பூசைப்பொய் புகுத்தும் போக்கில்*
*சொல்லாத கதை சோடித்துச் சுவர்க்கத்துச் சுவையுண் டாக்கும்*
*வெல்லாத வேதப் பாதை விளைத்தது இவ் இழிவு நீலா" (1979:66)*

என்னும் பாடலால் வேதப்பாதை (வேதநெறி) மனிதருள் பெரும்பகுதியினருக்கு இழிவை உண்டாக்கித் துயரினைத் தந்ததாகக் கூறுகிறார் வெள்ளியங்காட்டான்.

மக்களிடையே பாவம், புண்ணியம் என்னும் வினைப்பயன்களைக் கற்பித்து, அவற்றைச் சரிசெய்ய பற்பல பொய்ச் சடங்குகளை உண்டாக்கி மக்கள் பணத்தைப் புரோகிதர்கள் கொள்ளை இடுவதாகத் திராவிட இயக்கம் கருதுகிறது. வெள்ளியங்காட்டாரின் குறுங்காவியங்களுள் இடம்பெற்ற,

*"வினைப்பயன் என்னும் சொல்லை விதிப்பயனாக மாற்றிப்*
*பனைப் பருமன் துன்பத்தைப் பாரினில் விளைத்து நம்மைத்*
*தினைப் பருமன் நன்று ஈயாத் தெளிவற்ற சடங்கின் மூலம்*
*நினைப்பருஞ் செலவு வைத்தே நிலை குலைக்கின்ற நூல்கள்*
*……………………………………………………………..*

இனம் | INAM (IIETS)
E-ISSN: 2455 - 0531 | UAN: TN0300061112
மலர் : 9 | இதழ் : 37 | பிப்ரவரி | 2024 | Vol.: 9 | Issue: 37 | February | 2024

*நிதம் உழைத்து உடலும் தேய நீண்டநாள் சேர்த்த காசை*
*விதமுறப் பசனை பூசை விழாக்களில் விரய மாக்கிப்*
*புதுமுறைத் துயரம் தன்னில் புகுத்திடும் புத்தகங்கள்" (1967:142)*

என்னும் பாடல்களில் காணமுடிகிறது.

**6. மனுதர்ம, அர்த்த சாஸ்திரங்களின் உட்கிடை**

இந்திய வரலாற்றில் இடைக்காலத்திலிருந்து ஆங்கிலேயர் காலம் வரை மனுஸ்மிருதியும் கௌடில்யரின் அர்த்தசாஸ்திரமும் செல்வாக்குடன் பின்பற்றப்பட்டுள்ளன. மன்னராட்சியில் நிருவாகவியல், குடிமையியல், குற்றவியல் சார்ந்த சட்டங்களாக அவை விளங்கியுள்ளன. பொதுநோக்கின்றி வருணாசிரம அடிப்படையில் குலத்திற்கு ஒரு நீதி என்னும் அடிப்படையில் கருத்துகள் அந்நூல்களில் எழுதப்பட்டுள்ளன. சாதிய ரீதியில் மக்களை ஒடுக்குவதற்கும், சமூக மாற்றங்களை அனுமதிக்காமல் விளிம்புநிலை மக்களைத் தொடர்ந்து ஒடுக்கும் சனாதனத் தன்மையைப் பேணிப் பாதுகாப்பதற்கும் அவை துணை செய்தன. சமத்துவம், சமூக நீதியைக் கோரும் இயக்கங்கள் கடிந்து ஒதுக்கும் பனுவல்களாக அவை 20-ஆம் நூற்றாண்டில் மாறின. அம்பேத்கர், பெரியார் போன்ற சீர்திருத்தவாதிகள் அந்நூல்களின் மக்கள் விரோதப் போக்கினைத் துணிந்து எதிர்த்தனர். திராவிடர் கழகம் மனுஸ்மிருதியை முழுவதுமாகத் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிட்டது. ஆக, அந்நூல்களின் கருத்துகளை எதிர்ப்பது திராவிட சித்தாந்தத்தின் ஒரு பகுதியானது.

வெள்ளியங்காட்டான் படைப்புகளிலும் அவற்றுக்கு எதிரான பதிவுகளைக் காண முடிகின்றது.

*"ஒழுக்கம் இல்லாதவன் ஊரார் உழைப்பினை உறிஞ்சி வாழும்*
*இழுக்கினை மறைக்க அன்றோ இறைவனை இழுக்கின்றான்இவ்*
*வழக்கினை வளர்ப்பீராய் நீர் வடிக்கின்றீர் மனுதர்மத்தைப்*
*பழக்கத்தினாலே பண்ணும் பழிபாவம் பகுத்து ஓராதே" (1977:65)*

என்னும் பாடல் மக்களைச் சுரண்டும் வழக்கத்தினை நிரந்தரமாகக் கொள்வதற்கு மனுதர்மம் எப்படிப் பயன்பட்டது என்பதைக் காட்டுகிறது.

*"ஆணுக்கும் பெண்ணுக்கும் தான் ஆரியர் ஆனோர்க்கு எல்லாம்*
*ஊணுக்கும் உடைக்கும் என்றும் ஊறு எதும் நேரா வாறே*
*காணிக்கை எனவே மக்கள் கைப்பொருள் கவரும் மார்க்கம்*
*சாணக்கியன் தான் அன்றே சாமியின் பேரால் செய்தான்.*

*மதுக்கடை கறிக்கடைக்கும் மறக்காமல் கட்டு திட்டம்*
*செதுக்கிடை வைத்தான்; மன்னர் செயல்முறை வகுத்துச் சொன்னான்*
*புதுக்கிடை விளக்கானேனும் பொதுமக்கள் படிக்குமாறே*
*ஓதுக்கிடை ஒருசொல் கூட உரைக்காத பாவி ஆனான்" (1967:109)*

என்னும் பாடல்கள் அர்த்தசாஸ்திரத்தினை விமர்சனம் செய்கின்றன. அரசின் வருவாயைப் பெருக்கக் காணிக்கை, மதுக்கடை போன்ற வழிமுறைகளைக் கையாண்டு கொள்ளலாம் எனத் திட்டம் வகுத்துக் கொடுத்த சாணக்கியன், பொதுமக்களின் கல்விக்கு என எந்தவொரு திட்டத்தையும் தம் நூலில் ஒரு சொல்லில்கூடச் சொல்லவில்லை என்னும் குற்றச்சாட்டை வெள்ளியங்காட்டான் முன்வைக்கிறார். வேத பாடசாலைகளும் திண்ணைப் பள்ளிக்கூடங்களுமே அன்றைய சாதி இந்துகளுக்காக நடத்தப்பெற்று வந்தன.

**7. மூடநம்பிக்கைகளை இனங்காட்டல்**

திராவிடக் கருத்தியல் என்பது பகுத்தறிவுவாதத்தை முன்னிறுத்தும் கோட்பாடாகும். எதையும் கேள்விக்கு உட்படுத்தி அறிவாராய்ச்சி செய்து மக்களின் முன்னேற்றத்திற்குப் பயன்படும் பழக்கவழக்கங்களையே அது ஊக்குவிக்கும். காலத்திற்குப் பொருந்தாத, மனித குலத்திற்குப் பயனற்ற நடைமுறைகளைக் கைவிடுவதே அறிவின் பயன் என்பதை அது வலியுறுத்தும். ஒருசாரார் தம் சுய நலத்திற்காகப் பிறர் மீது திணிக்கும் வழக்கங்களையும், அவற்றைச் சிந்திக்காமல் பின்பற்றும் செயல்பாடுகளையும் திராவிடக் கருத்தியல் கண்டிக்கின்றது; எள்ளி நகையாடுகிறது. வெள்ளியங்காட்டான் படைப்புகளிலும் இப்போக்கினைக் காண முடிகிறது.

*"பஞ்சாங்கம் பார்த்தான் வாய்த்த பருவத்தைப் பாரானாகி*
*வஞ்சித்தாள் வையகத்தாய் வருந்திட"* (1977:39)

என்னும் பாடற்பகுதியில் விதைப்பதற்கான பருவத்தைத் தவறவிட்டு வெறும் பஞ்சாங்கத்தில் நாள் பார்த்துப் பயிர் செய்தால் பூமித்தாய் தகுந்த விளைச்சலைத் தராமல் வருந்தச் செய்வாள் என வெள்ளியங்காட்டான் கூறுகிறார்.

*"மாடொன்று கன்றை ஈன்று மாசுஅது மண்ணில் வீழ்ந்தால்*
*மூடொன்றுப் பையில் போட்டு முகம்கோணாது எடுத்துச் சென்று*
*கேடொன்று வாராது ஆலங் கிளையினில் கட்டி விட்டால்*
*பாடின்றி மிகும் பால் என்றும் பகர்கிறான் என்றான் சின்னன்.*

*பச்சைப்புல் பருத்திக்கொட்டை பணச்செலவு அனைத்தும் பையில்*
*மிச்சம்தான்! இந்தத் தோது மேல் நாட்டார் அறியார்! மேலும்*
*இச்சித்தவிதம் பால்மாடும் இருமடங்கு ஈயுமாயின்*
*மெச்சத்தான் வேண்டும் நாடு இம்மேதையை என்றான் நித்யன்"* (1977:39,40)

இவை பால்மாடு பற்றிய மூடநம்பிக்கையைச் சாடுகின்றன. கன்று ஈன்ற பசுமாட்டின் கழிவுகளைப் பாலுள்ள ஆலமரத்தில் கட்டினால் பால் பெருகும் என்ற நம்பிக்கையைக் கேள்விக்கு உள்ளாக்குகின்றன. பால்மாடு சத்துள்ள தீவனங்களால் கறக்குமே அன்றி, மேற்கண்ட செயலால் கறவை பெருகாது. இந்தியா/ தமிழகத்தை விட அதிக அளவு பால் கறந்து ஏற்றுமதி செய்யும் மேல்நாட்டாருக்கு இந்த உத்தி தெரியாமல் போனதென்று கவிஞர் எள்ளி நகையாடுகிறார்.

### 8. கண்மூடித்தனமான பக்தியின் விளைவுகள்

பகுத்தறிவு அற்ற பக்தியால் தனிமனிதருக்கும் சமூகத்திற்கும் பல இன்னல்களும் இழப்புகளும் ஏற்படுவதைத் திராவிடக் கருத்தியல் எடுத்துரைக்கின்றது. சுய சிந்தனையும் சுதந்திர உணர்வுமே மனிதனை மகிழ்ச்சியாக வாழச் செய்யும். அவற்றை அறியாமையாலும் அடக்குமுறைக்குப் பயந்தும் பறிகொடுத்தோர்க்கு ஆதரவாக நின்று ஆதிக்கக்காரர்களை எதிர்ப்பதும் திராவிட வேலைத்திட்டங்களில் ஒன்று. இதனை வெள்ளியங்காட்டான் படைப்புகளில் காண முடிகின்றது.

*"பானைக்கு நாமம் போட்டுப் பக்தி என்றொரு பேர்வைத்துப்*
*பூனைக்கு மணியைக் கட்டிப் பூசைகள் புரியப் பண்ணி*
*ஏனைக் குழுக்கட்கு ஏற்ப இச்சகம் பேசித் தன்னை*
*யானைக்குக் கரும்புக் கொல்லை அமைத்தவாறு அமைக்கும்"* (1977:33)

என்னும் பாடல் பிறர் நலனுக்காகத் தன்னையே வதைத்துக் கொள்ளும் மூடர் நிலையை எடுத்துரைக்கிறது.

*"திருநீறு பூசிக்கொண்டும் திருமண்ணைச் சாத்திக் கொண்டும்*

*தெருநாறும் வேசம் பூண்டு தீனர் திக்கற்றோராய் இன்று*
*ஒரு நூறு லட்சம் மக்கள் ஊர்தொறும் இரந்து சாகக்*
*கரு நூறிச் சேர்த்த காசு கற்றறிந்தோர்க்கு நஞ்சாம்" (1977:62)*

என்னும் பாடலில் கோடிக்கணக்கான மக்கள் உடைமைகள் பறிக்கப்பட்டு, மதவேடமிட்ட பரதேசிகளாய்ப் பிச்சை ஏற்று உண்டு உழன்று இறக்கும் அளவிற்குத் தள்ளப்பட்டுள்ளதைக் கவிஞர் வேதனையுடன் பதிவு செய்துள்ளார். ஆன்மிக நெறியாளர்களின் பார்வையில் இது ஞானநிலை, மெய் தேடல், ஆன்ம ஈடேற்றம் போன்ற அடிப்படையில் விளக்கப்படலாம். 'ஆத்திகம் × நாத்திகம்' என்னும் எதிரிணையைப் பற்றியும் வெள்ளியங்காட்டான் (1967:14) பேசியுள்ளார்.

**9. சைவ × வைணவப் பகைமை**

மனித குலத்தின் ஈடேற்றம் என்ற பெயரில்தான் மதங்கள் தோன்றுகின்றன. அவை ஒரே மண்ணில் வினையாற்றும்பொழுது அவற்றிடையே பகைமை மூண்டு விடுகிறது. மக்களிடம் அன்பு, சகிப்புத்தன்மை போன்ற பண்புகளைப் பற்றிப் பாடம் நடத்தும் மதங்கள்தாம், இன்னொரு மதத்தின்மீது கருணையின்றி ரத்தவெறி கொண்ட போராட்டங்களை நடத்துகின்றன. மேலோட்டமாகப் பார்த்தால் இது முரண்பாடாகத் தோன்றும். ஆனால், 'சுரண்டுவோர் × சுரண்டப்படுவோர்' என்னும் எதிரிணையில் சுரண்டப்படுவோர் சகிப்புத்தன்மையுடன் தம் எதிரியிடமும் அன்பு காட்டுவது மதத்தின் இருப்பிற்குத் தேவையானது. ஆனால், போட்டிக்கு இன்னொரு மதம் வந்துவிட்டால் அவரும் சுரண்டட்டும் நாமும் சுரண்டுவோம் என்ற ஒப்பந்தம் எதுவும் செய்துகொள்ள முடியாது. எப்பொழுதும் மக்களிடத்தில் ஒரு மதமே தலைமைப் பீடத்தில் இருக்க விரும்பும். எந்தவொரு நிலத்திலும் இருவேறு மதங்கள் இணக்கமாக இருந்து மக்களுக்கு நல்வழி காட்டிய வரலாறே இல்லை. ஆபத்து வேளைகளில் பொது எதிரியை ஒழிக்கக் கைக்கோர்த்துக் கொண்டாலும், வரலாற்று நெடுகிலும் ஏகபோகமான ஒற்றைத் தலைமையே எல்லா நிறுவன மதங்களின் ஒரே நோக்கமாகும்.

மேலைநாடுகளில் இஸ்லாம் × கிறித்தவம், கீழைநாடுகளில் வைதீகம் × அவைதீகம், சைவம் × ஜைனம், பாகவதம் × பௌத்தம், ஜைனம் × பௌத்தம், சைவம் × பாகவதம் (வைணவம்) போன்ற எதிரிணைகள், கிறித்தவப் பிரிவுகள், இஸ்லாம் பிரிவுகள், ஜைன, பௌத்த, சைவ, பாகவதப் பிரிவுகள் தத்தமக்கான உட்பிரிவுகள் இடையே நிலவிவரும் மோதலைக் குறிப்பிடலாம். அந்த அடிப்படையில் தமிழ்மண்ணில் நடந்த சைவ × வைணவச் சண்டையை வெள்ளியங்காட்டான்,

*"நெருப்புதான் சைவம் நேர்ந்து நினைமினோ என்றும் நீரின்*
*பரப்புதான் வைணவம் பார்த்துப் பணிமினோ என்றும் பன்னி*
*இருப்புதான் இன்றித் துஞ்சற்கு இருவேறு செய்தார் நாட்டில்*
*விருப்புதான் வெறுப்பாய் வீரம் வெட்டும் குத்தாகுமாறே" (1979:65)*

எனும் பாடலில் நினைவுகூர்கிறார். ஆத்திகர்களை எதிர்க்கப் புறப்பட்ட நாத்திகக் குழுவான திராவிட அமைப்பும் தமக்குள் சண்டையிட்டுப் பிளவுண்டு தனித்தனி அணிகளாய் நிற்கின்ற வரலாற்று நகைமுரணும் இங்கு எண்ணத் தக்கது.

**10. சாதித் தீண்டாமையை எதிர்த்தல்**

பல நூறு ஆண்டுகளாகச் சாதிய அடிப்படையில் தமிழ்ச்சமூகம் பிளவுபட்டுக் கிடக்கிறது. பிறப்பினால் கற்பிக்கப்படும் சாதிய உயர்வுதாழ்வுகள், சக மனிதர்களை இழித்தும் பழித்தும் நடத்துவதற்கும், ஒடுக்கப்பட்டோரைப் பொருளியல் ரீதியாகச் சுரண்டுவதற்கும் காரணமாக இருந்துள்ளன. திராவிடக் கருத்தியலின் மூலாதார முழக்கம் சுயமரியாதை என்பதாகும். இந்த உலகில் யாரும் யார்க்கும் பிறப்பின் அடிப்படையில் தாழ்ந்தோரோ அடிமையோ இல்லை. முதலில் தன்னைத்தான் மதிக்க வேண்டும். அப்பொழுதுதான்

பிறர் தன்மீது செலுத்தும் அவமரியாதைக்கு எதிர்வினையாற்ற முடியும் என்பது திராவிடச் சித்தாந்தம். சாதி அடிப்படையில் மக்களைப் பிரித்து வைத்துச் சுரண்டுவதை வெள்ளியங்காட்டான்,

*"சக்கிலி பறையன் என்னச் சாதிகள் பிரித்துத் தாழ்த்திச்*
*செக்கினில் எள்ளாய் இட்டுச் செல்வர்கள் இவரை ஆட்டி*
*ஒக்க நல் எண்ணெய்யாக உழைப்பினை உறிஞ்சிக் கொண்டு*
*சக்கையாய்த் தள்ளி எல்லாம் சங்கரன் செயல் என்கின்றார்" (1977:41)*

என்னும் பாடல்வழி எடுத்துரைக்கிறார். திராவிட இயக்கங்களின் எழுச்சிக்குப் பின்னர், தமிழ்நாட்டு மக்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிப் பட்டங்களைப் போட்டுக் கொள்ளும் வழக்கம் ஆகப் பெரும்பான்மையாகக் குறைந்து இன்று அருகிவிட்டது. இந்தியத் துணைக்கண்டத்தில் இது ஒரு மாபெரும் சீர்திருத்தமாகும்.

**11. சமத்துவமும் சமூகநீதியும்**

முந்தைய சமூகம் ஏற்றத்தாழ்வு உடையதாக இருந்தாலும் அதனை மாற்றி மனிதர்களுக்கு இடையே சமத்துவத்தையும், அதுவரை வஞ்சிக்கப்பட்டவர்களுக்கு உரிய உரிமைகளையும் கோருவது திராவிடச் சிந்தனையாகும். காலனியம் ஏற்படுத்திக் கொடுத்த சமத்துவத்திற்கான வாய்ப்புகளை, விடுதலைக்குப் பிந்தைய தமிழ் மண்ணில் வீச்சாக முன்னெடுத்துச் சென்ற அமைப்பாகத் திராவிட இயக்கம் விளங்குகிறது.

*"சிலையினில் இல்லையாம் தெய்வம்; சிவன் அரி என்பதெல்லாம்*
*கலைஞனின் கைச்சரக்காம்; கஞ்சி இல்லாமல் சாகும்*
*புலையனும் வேதம் ஓதும் புரோகிதன் என்போன்தானும்*
*தலைமூக்கு வாய்கண் ஆதி தனில் சமமானோர் தானாம்!" (1967:46)*

என்னும் வெள்ளியங்காட்டான் பாடல், சாதியால் வேற்றுமைப்படுத்தப்படும் அனைவரும் உடலுறுப்புகளால் உணர்வால் மனிதர்கள்தாம்; எல்லோரும் சமம்தான் என்பதை அழுத்தமாகப் பதிவு செய்கிறது.

**12. பொதுவுடைமை நோக்கும் உழவுத் தொழிலும்**

ஆரியர்களின் சூழ்ச்சிகளுக்கு எதிராகக் கட்டப்பட்ட திராவிட இயக்கம், உலக அளவில் பாட்டாளி வர்க்க அரசியலான பொதுவுடைமைக் கோட்பாடுகளையும், இந்திய அளவில் ஒடுக்கப்பட்டோருக்கான அம்பேத்கரியச் சிந்தனைகளையும் ஆதரித்தது. தந்தை பெரியாரின் சோவியத் பயணம், அம்பேத்கர் சந்திப்பு, அவை குறித்த எழுத்துகள் போன்றவற்றிலும் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி போன்ற திராவிட இயக்கத் தலைவர்களின் கொள்கைச் செயல்பாடுகளிலும் அவற்றின் தாக்கத்தைப் பார்க்க முடியும்.

*"வீட்டினில் வட்டிக் காசால் விருந்து உண்ணும் வீணர்க்காகக்*
*காட்டினில் தோட்டம் தன்னில் கருத்துடன் உழவர் பட்ட*
*பாட்டின் நற்பயன் அனைத்தும் பறிபட்டுப் பரிதவிக்கும்*
*நாட்டில் நல்லாட்சி கோலி நலமுறச் செய்வேன் இன்றே" (1967:18)*

என்னும் வெள்ளியங்காட்டான் பாடல், நேரடியாக உழைப்பில் ஈடுபடாமல், பாட்டாளிகளின் உழைப்பைச் சுரண்டிக் கொழுக்கும் ஆதிக்க வர்க்கத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றது.

உழவுத் தொழிலை முதன்மையாகக் கொண்டதாக இந்தியா/ தமிழ்நாடு விளங்குகிறது. விவசாயிகளை உள்ளடக்காமல் எந்தப் புரட்சியையும் இந்த மண்ணில் வென்றெடுக்க முடியாது. அதனால், விவசாயிகளை ஆதரிப்பதும் அவர்களை ஊக்கப்படுத்துவதும்

முற்போக்கு இயக்கங்களுக்குரிய முன் நிபந்தனை ஆகும். அதனைத் திராவிட இயக்கமும் செய்யத் தவறவில்லை. வெள்ளியங்காட்டான் பாடல்களிலும் இதனைப் பார்க்க முடிகிறது.

*"ஊர் பிடித்து ஆள உள்ள உத்தியோகத்தன் ஆதி*
*சீர் பிடித்து எழுதுவோன் அச்சி ஏற்றுவோன் விற்போன் கற்போன்*
*நேர்பிடித்து ஒழுகி வாணி பம்செய்வோன் நெய்வோன் யார்க்கும்*
*ஏர்பிடித்து உழுவோனேதான் எசமானன் என்பது ஓரீர்!" (1967:71)*

என்னும் பாடல், வெவ்வேறு வேலைப் பிரிவினைகளைச் செய்வோருக்கும் உழவர்கள் அடிப்படையாக உள்ளனர் என்பதை விளம்புகிறது.

**13. கல்வியின் இன்றியமையாமை**

ஏற்றத்தாழ்வான சமூகத்தில் மக்களிடம் விழிப்புணர்வும் சுயமரியாதையும் பகுத்தறிவும் பெருகக் கல்வியறிவு இன்றியமையாதது என்பதைத் திராவிட இயக்கம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது. பொதுக்கல்வியை வலியுறுத்தும் அதேவேளையில் ஊர்தோறும் படிப்பகங்களை அமைத்து அரசியல் கல்வியைப் புகட்டவும் அது தவறவில்லை. பல்வேறு இதழ்களையும் அவ்வியக்கம் குறிப்பிடும்படியாக நடத்தியுள்ளதையும் இங்குக் கருத வேண்டும். பிற்படுத்தப்பட்டோர், ஒடுக்கப்பட்டோர் கல்வியையும் அதன்வழி வேலைவாய்ப்பையும் பெறுவதற்காக இடஒதுக்கீடுகளை உறுதி செய்வதற்குப் பல போராட்டங்களையும் திராவிட இயக்கம் நிகழ்த்தியுள்ளதை வரலாறு காட்டுகிறது. ஆக, எல்லாத் தளங்களிலும் சமத்துவமும் சமூகநீதியும் கல்வியால் ஏற்படும் என்பதில் அவ் இயக்கத்திற்கு அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது.

*"கல்வியே கருவி! முன்னோர் கருத்தினைக் கண்டு கொள்ள;*
*கல்வியே செல்வம்! பின்னோர்க் காகநாம் தேடி வைக்க;*
*கல்வியே அரசு! வாழ்க்கைக் கௌரவம் பாதுகாக்க;*
*கல்வியே கடவுள்! நம்மைக் கடைத்தேற்றி விடுவதற்கே" (1967:140)*

என்னும் வெள்ளியங்காட்டான் பாடலிலும் அது எதிரொலிக்கிறது.

**14. திராவிடக் கொள்கையும் இலக்கியப் பரிந்துரையும்**

கல்வியில் முன்னேறி வரும் புதிய தலைமுறையிடம் எந்தெந்தத் தமிழ் இலக்கியங்களுக்கு முன்னுரிமை கொடுத்துப் பயில வேண்டும், எவ்வெவற்றை எச்சரிக்கையாக அணுகவேண்டும் என்பதைத் திராவிட இயக்கம் போதித்தது. அது அவ் இயக்கத்தின் அரசியல் கோட்பாடு சார்ந்தது என்பதையும் மறைக்கவில்லை. குறிப்பாக, இராமாயணம், மகாபாரதம், தேவாரம், ஆழ்வார் பாசுரங்கள், பக்தியை ஊட்டும் பற்பல சிற்றிலக்கியங்கள் போன்றவற்றைப் படிப்பது மொழியறிவு, இலக்கியச்சுவை என்பதைத் தாண்டி அரசியல் பின்னடைவை வருணாசிரம ஆதரவை மீண்டும் உண்டாக்கிவிடும் என்பதில் விழிப்பாக இருந்தனர். அவற்றைப் பொதுவெளிகளில் அரசியல் மேடைகளில் பேச்சில் எழுத்தில் அறிவுநிலையிலும் உணர்ச்சிவசப்பட்டும் எதிர்த்தனர். வெள்ளியங்காட்டான் படைப்புகளிலும் இப்போக்கினைக் காண முடிகிறது.

*"புண்ணியக் கதைகள் என்ற புளுகினில் புலனைப் போக்கி,*
*மண்ணினில் உழைத்து வாழும் மக்களின் மனத்தை மயக்கக்*
*கண்ணியம், காசு, காணி, காதல், காப்பு அனைத்தும் காண*
*எண்ணிடின் ராம நாமம் ஏற்றுவீர் இதயத்து என்பர்" (1979:37)*

*"தாவாரம் தேடார்; என்றும் தரணி வாழ்வு இகழ்வார் செய்த*
*தேவாரம் தினமும் பாடித் திகழ்பவர் பக்தராகி" (1967:64)*

*“முப்பத்து மூன்று கோடித் தேவர்க்கும் முறையாய் பங்கின்*
*பப்பத்துக் கோடி தேறும் பாமாலை, வண்ணம், சிந்து,*
*ஒப்பித்த முற்று மோனை யமக வெண்பாக்கள்! கேட்டுத்*
*தப்பித்துப் பிழைத்தோம் கற்கள் தாம் ஆனதால் நாம் என்னும்” (1967:66)*

என்னும் பாடல்களில் இராமாயணம், தேவாரம், பக்திச் சிற்றிலக்கியங்கள் பற்றிய எதிர்நிலைக் கருத்தினைக் காணமுடிகிறது. இராமாயண அரசியல் திராவிட இயக்கக் களத்தில் கூர்முனையாக ஒரு காலத்தில் இருந்தது. இராமனையும் கம்பனையும் கடியும் அதேவேளையில் எதிர்நிலை மாந்தர்களான இராவணன் உள்ளிட்ட அரக்கர்களை நாயகர்களாகவும், தங்கள் திராவிட இனத்தின் பிரதிநிதிகளாகவும் கொண்டாடினர். தமிழகத்தில் ‘இராவண காவியம்’ எழுந்தது இதன் உச்சநிலையாகும். வெள்ளியங்காட்டான்,

*“காக்கின்ற கடவுள், காக்கும் காவலன் மகனாய்க் காட்டில்*
*போக்கொன்றிப் போன போது, பொன்னிபோல் வந்த பெண்ணை*
*மூக்கன்றி முலையுங் கொய்து முடுக்கினான் என மொழிந்தால்,*
*நோக்குஒன்றுஞ் சுவர்க்கத்திற்கு ஓர் நுழைவுச்சீட்டு ஆயிற்று என்பர்”*

*(1979:36)*

என்னும் பாடலில் சூர்ப்பனகையின் மூக்கினையும் முலையினையும் அரிந்த இராம, இலக்குவனின் செயலை விமர்சிக்கின்றார். இதில் மெற்சொன்ன திராவிடப் பார்வை அடங்கியுள்ளது. இராமயணம், பக்தி இலக்கியங்கள் போன்றவற்றை எதிர்த்த திராவிட இயக்கம் மாற்று இலக்கியங்களை முன்வைத்தன. குறிப்பாக, சிலப்பதிகாரம், திருக்குறள், புறநானூறு முதலான சங்க இலக்கியங்கள் போன்றவற்றை அவர்கள் ஆதரித்தார்கள். அவற்றுள் ஆரியக் கருத்தியல் கலப்புகள் அதிகமாக இல்லாததுடன், அவை தமிழ் மண்ணின் அசலான பண்பாட்டுப் பிரதிகள் என்பதையும் திராவிட இயக்கம் பரப்புரை செய்தது. தங்கள் அரசியலுக்கு அவற்றைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். மேற்சொன்ன இலக்கியங்கள் தமிழ்நாட்டில் பொதுமக்களிடம் பரவத் திராவிட இயக்கம் முக்கியமான காரணமாகும். அவ் இலக்கியங்கள் பின்னிடைக் காலத்தில் (பொ.ஆ. 16 – 19 நூற்றாண்டுகளில்) சைவ ஆதினங்களாலும் பண்டிதர்களாலும் புறச்சமய நூல்கள் என ஒதுக்கப்பெற்றவை (மயிலை சீனி. வேங்கடசாமி, 2001:62) என்பதும் இங்கு நினையத் தக்கது.

*“உள்ளினோர்க்கு உவகை ஊறும் உணர்ந்தவர்க்கு உறுதி ஊட்டும்*
*தெள்ளிய தமிழில் நல்ல திருக்குறள் இயற்றித் தந்த*
*வள்ளுவன் பிறந்த நாட்டில்” (1967:12)*

*“இல்லாதார்க்கு இரங்கி வாரிக் கொடுக்கின்ற ஈகை போச்சு;*
*குறிக்கோளாய்ப் புறநானூறு படிக்கின்ற பழக்கம் போச்சு;*
*பண்பாடும் பாழாய்ப் போச்சு;” (1979:17)*

*“கற்பதற்கு ஏற்றவை நம் கடைச்சங்க நூற்கள்; கற்று*
*நிற்பது கடைப் பிடித்தல் நெறிமுறை தமிழர்க்கு என்பர்” (1967:142)*

என்னும் வெள்ளியங்காட்டான் பாடல்களால் திருக்குறளும் புறநானூறு உள்ளிட்ட சங்க இலக்கியங்களும் தமிழர்கள் கற்க வேண்டியவை என்னும் செய்தி புலனாகிறது.

திராவிட இயக்கம் பற்றியோ திராவிடத் தலைவர்கள் பற்றியோ ஆய்வு எல்லைக்குள் நேரடியான கூற்றுகள் எதுவும் இடம்பெறவில்லை.

*“கறுப்பு இது சிவப்பு இது என்று கண்கொண்டு காணா முன்னே*

*மறுப்பு அது செய்தாய், நந்தா" (1967:24)*

என்னும் பாடற்பகுதியில் இடம்பெறும் குறிப்பும், அது வெளியான ஆண்டும், திராவிட முன்னேற்றக் கழகக் கொடியை நினைவுபடுத்துகின்றன. இது வெள்ளியங்காட்டான் கருதிச் செய்ததா, தற்செயலானதா என்பது மேலாய்விற்கு உரியது.

**நிறைவுரை**

திராவிட இயக்கம் தமிழ்ச் சமூகத்தில் அழுத்தமான பதிவுகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பலர் கவர்ந்து இழுக்கப்பட்டுள்ளனர். சிலர் இதில் நிரந்தரமான பற்றாளர்களாகத் தங்கியும், சிலர் இதனை ஆதரித்துப் பின்னர் வேறுசில கருத்தியல்களால் கவரப்பட்டுச் சென்றும் உள்ளனர். இந்த அரசியல் இயக்கத்தில், சிலர், தம்மை நேரடியாக இணைத்துக் கொள்ளாமல் வெளியில் இருந்து கொள்கை ஆதரவாளர்களாகவும் செயல்பட்டுள்ளனர்.

வெள்ளியங்காட்டான், சிலகாலம் தமிழ்நாட்டிலும் சிலகாலம் கருநாடகத்திலும் வாழ்ந்து மறைந்துள்ளார். அவரிடத்தில் திராவிட இயக்கச் சார்பு எந்த வகையில், எந்த அளவில் இருந்தது, அது தொடர்ந்து விளங்கியதா, இடை முறிந்ததா, அதன் தாக்கம் அவர் படைப்புகளில் எவ்வாறு வெளிப்படுகிறது என்பதை எல்லாம் முழுமையாக ஆராய வேண்டும். அவர் எழுதிய கவிஞன், அறிஞன், தமிழன் ஆகிய மூன்று படைப்புகளையும் முன்முடிபுகள் அற்ற ஒரு பொதுவாசக நிலையில் படித்தபொழுது திராவிடக் கருத்தியல்கள் அவற்றுள் படிந்திருந்ததைக் காண முடிந்தது. இந்தப் பார்வையில் அவர் படைப்புகளை முழுமையாக ஆய்வுக்கு உட்படுத்தும்பொழுது வேறுசில உண்மைகளும் புலப்படலாம்.

பாரதிதாசன் (1891 – 1964), வாணிதாசன் (1915 – 1974), முடியரசன் (1920 – 1998), சுரதா (1921 – 2006), புலவர் குழந்தை (1906 – 1972), தமிழ்ஒளி (1924 – 1965) போன்றோர் திராவிட இயக்கக் கவிஞர்களாக நன்கு அறியப்பட்டவர்கள். வெள்ளியங்காட்டாரின் கவிதைகளில் காணப்படும் திராவிடக் கருத்தியல்கள் பரவலாக அறியப் பெறாதவையாக உள்ளன. அவற்றை இக்கட்டுரை ஓரளவு எடுத்துரைத்துள்ளது. மேற்சொன்ன இயக்கக் கவிஞர்களுடன் வெள்ளியங்காட்டான் கவிதைகளை ஒப்பிட்டு ஆய்வு செய்வதற்கும் இடமிருக்கின்றது. சுயம்புவாகத் தமிழ் கற்றுத் தேர்ந்த வெள்ளியங்காட்டான் படைப்புகளில் புறநானூறு (196,125,143), திருக்குறள் (1967:25,31,71,120), தேவார, திவ்ய பிரபந்தம் (1967:65), இலக்கணம் (1967:98), சித்தர் பாடல்கள் (1967:64,73,102), ஏரெழுபது (1967:60), பாரதியார் பாடல்கள் (1967:17,39) போன்றவற்றின் தாக்கங்களை உணர முடிகிறது. அந்தக் கோணத்திலும் ஆய்வினை நிகழ்த்த முடியும்.

குறுங்காவியங்களாக எழுதப்பட்ட கவிஞன், அறிஞன், தமிழன் ஆகியவற்றை மேடை நாடகங்களாக்கி நடிப்பதற்கான வாய்ப்பு உள்ளதையும் இக்கட்டுரை சுட்டிக் காட்டுகிறது.

**அடிக்குறிப்பு**

[1]ஆரியத்திற்கு மாற்றாகத் திராவிடம் என்றும், ஆரியருக்கு எதிராகத் திராவிடர் என்றும் சொல்லும்போது, அது பெருவாரியாக இன்றைய தமிழ்நாடு, கருநாடகம், ஆந்திரம், கேரளம் ஆகிய மாநிலங்களில் பேசப்படும் மொழிகளையும் அங்கு வாழும் மக்களையும் குறிக்கும் என்று அன்றைய ஆய்வாளர்கள் கூறினர். மேற்சொன்ன பகுதிகளில் வழங்கும் மொழிகளுக்கு எல்லாம் பொதுவாக 'மூல திராவிட மொழி' என்னும் கருத்தாக்கத்தை உருவாக்கி அவற்றின் பிரிவுகளாக இன்றைய தென்னிந்திய மொழிகளை விளக்கினர். ஆனால், இன்றைய அறிஞர்கள் சிலர், திராவிடம் என்பதே தமிழ்தான். அதன் கிளைகளே பிற மொழிகள் என்று கூறுகின்றனர். இன்றைய தமிழில் இல்லாத சில தொல் திராவிடப் பண்புகள்/ கூறுகள் கன்னடம், துளு, குடகு, மலையாளம் போன்ற மொழிகளில் இருப்பதை மொழியியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். மேலும், பாகிஸ்தான் வரை

பரவியிருக்கும் திராவிட மொழிகளில் சீரான ஒற்றுமையும் வேற்றுமையும் காணப்படுகின்றன. அவற்றை ஒட்டுமொத்தமாகத் தமிழுக்குள் அடக்க முடியாது என வாதிடுகின்றனர். அதற்கு, தாயிடம் இல்லாத பண்புகள் சேயிடம் இருப்பதால், அந்தச் சேய்க்கும் தாய்க்குமான உறவு இல்லாமல் போகாது என்றும், பாரதத்திற்கு மட்டுமல்ல, பாகிஸ்தானுக்கு மட்டுமல்ல, பாருக்கே தமிழ்தான் தாய்மொழி என்று வாதிடும் அளவிற்கான தமிழ் தேசியவாதமும் இங்குண்டு. அதனடிப்படையில் 'ஆரியம் × திராவிடம்' என்ற எதிரிணைக்கு மாற்றாக, 'ஆரியம் × தமிழ்' என்பதே பொருத்தமானது என்று கூறித் திருநாவுக்கரசர் முதலானோரை அவர்கள் சான்று காட்டுவர். ஆனால், தொடக்க கால திராவிடவியல் ஆராய்ச்சியாளர்களிடம் திராவிடம், தமிழ் பற்றிய உள்முரண்பாட்டுச் சிக்கல்கள் இல்லை. அவர்கள் ஆரியத்திற்கு மாற்றாகத் திராவிடம், தமிழ் என எதனை முன்னிறுத்தினாலும் ஆரியத்தை எதிர்க்கும் குறிக்கோளில் உறுதியாக இருந்தனர். இன்று 'திராவிடம் × தமிழ்' என்பதே எதிரிணையைப் போல வைத்து விவாதிக்கப்படுகிறது.

**துணை நின்ற நூல்கள்**

1. வெள்ளியங்காட்டான். 1967. கவிஞன். கோவை: குமணன் பதிப்பகம்.
2. வெள்ளியங்காட்டான். 1977. அறிஞன். கோவை: குமணன் பதிப்பகம்.
3. வெள்ளியங்காட்டான். 1979. தமிழன். கோவை: குமணன் பதிப்பகம்.
4. வேங்கடசாமி. சீனி, மயிலை. 2001. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தமிழ் இலக்கியம். சிதம்பரம்: மெய்யப்பன் தமிழாய்வகம்.